சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 20.09.2024

SC.129/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர்.R.மகேஸ்வரி | தொழில் | : | |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |

**அ.சா.8**

---

முதல் விசாரணை

நான் தற்சமயம் பெரியகுளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் நிலைய மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.01.2019 அன்று நான் கம்பம் அரசு மருத்துவமனையில் பணி மருத்துவராக இருந்தபோது இரவு 7.20 மணிக்கு 50 வயதுள்ள நல்லதம்பி என்பவரை அடையாளம் தெரிந்த 4 நபர்கள் விளக்கமாறு, இரும்பு கம்பி மற்றும் மரக்கட்டையால் அடித்ததாகவும், அதனால் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அவருடைய உறவினர் பாண்டி என்பவர் அழைத்து வந்தார். அவரை பரிசோதனை செய்தபோது கீழ்க்கண்ட காயம் இருந்தது. இடது உள்ளங்கையில் சிராய்ப்பு காயம் இருந்தது-1, இடது தோள்பட்டையில் வலி இருந்ததாக கூறினார்-2 அவரை கம்பம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. இடது தோள்பட்டை பகுதிக்கு எக்ஸ்ரே எடுத்து எலும்பு நிபுணர் பரிசோதித்ததில் அவருக்கு தோள்பட்டை எலும்பு பகுதியில் எலும்பு முறிவு இல்லை என்று சான்றளித்தார். இது சிறுகாயம் என சான்றளிக்கிறேன். நான் வழங்கிய காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.6**. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

சம்பவம் இரவு 4.30 மணிக்கு நடந்ததாக காயம்பட்ட நபர் கூறினார். விபத்து பதிவேடு நகலில் காவல்துறைக்கு தகவல் கொடுத்ததாக இல்லை என்றால் நாங்கள் விபத்து பதிவேட்டில் தனிப்பட்ட முறையில் எழுதுவது கிடையாது. MLC வழக்கு என்பதால் நடைமுறையில் தகவல் கொடுத்து விடுவார்கள். இடது உள்ளங்கையில் மட்டும் சிவந்த காயம் இருந்தது. மற்ற பகுதியில் சிவந்த காயம் இல்லை. ஒரு நபர் கல் தடுமாறி கீழே விழும்போது கூட காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட

வாய்ப்புள்ளது. தோள்பட்டையில் வலி இருந்ததாக கற்பனையாக கூட சொல்லலாம் என்றால் சரியல்ல. ஆனால் காயம்பட்ட நபருக்கு தோள்பட்டையில் கன்னிய மற்றும் சிவந்த காயங்கள் இல்லை. கூர்மையான அரிவாளால் வெட்டும்போது வெட்டுக்காயம் ஏற்படத்தான் வாய்ப்புள்ளது என்றும், சிராய்ப்பு காயம் ஏற்படாது என்றால் சரிதான்.